
பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 25 புதன்கிழமை 10.09.2025 | அதிர்வு 42

**கட்டுநாயக்க விமான நிலையத்தில்**

## குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை சிக்கினார்



சுமார் 10 கிலோகிராமுக்கும் அதிகளவான குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் இரத்து!

## இன்று அமுலுக்கு வந்தது சட்டம் சபையில் 150 எம்.பிக்கள் ஆதரவு

“ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்)” சட்டமூலம் 150 மேலதிக வாக்குகளால் இன்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இன்று மு.ப. 11.30 மணி முதல் குறித்த சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு விவாதம் இடம்பெற்றதுடன், பி.ப. 3.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 02



## 10 மாதங்களுக்கு மூடப்படவுள்ள கொழும்பு மத்திய பஸ் நிலையம்

கொழும்பில் உள்ள மத்திய பஸ் நிலையம், புனரமைப்புப் பணிகளுக்காக நாளை வியாழக்கிழமை முதல் 10 மாதங் 02

## கத்திக்குத்துக்கு இலக்காகி இளம் குடும்பஸ்தர் மரணம்

(பாறுக் ஷிஹான், ஏ.எல்.எம்.ஷினாஸ்)



அம்பாறை மாவட்டம், பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை 65 மீற்றர் வீட்டுத் திட்டப் பகுதியில் நேற்று இரவு இரு குடும்பஸ்தர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு பின்னர் கத்திக்குத்தாக மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 02

# மொரட்டுவை நகர சபையின் முன்னாள் தவிசாளர் கைது!

## செப். 23 ஆம் திகதி வரை விளக்கமறியல்

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மொரட்டுவை நகர சபையின் முன்னாள் தவிசாளர் சமன் லால் பெர்னாண்டோ இன்று முற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இன்று பிற்பகல் நீதிமன்றத்தில் அவர் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவை மாநகர சபையின் வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை தனது அன்புக் குரியவர்களுக்கு வழங்கியதன் மூலம் அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்திய குற்றச் சாட்டில் சமன் லால் பெர்னாண்டோ, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.



### கத்திக்குத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 29 வயதுடைய அலாவுதீன் ரிஷாத் என்ற இளம் குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 47 வயதுடைய நபர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட விசேட தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### குஷ் போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இன்று புதன்கிழமை பயணிகள் வருகை முனையத்தின் ஊடக வெளியேற முற்பட்ட சந்தேகத்துக்கிடமான பயணி ஒருவரைச் சுங்கப் பிரிவு அதிகாரிகள் தடுத்து நிறுத்தி சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது அந்த நபரின் பயணப் பொதியினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 கிலோ 750 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தினுடாகச் சந்தேக நபர் நாட்டை வந்தடைந்துள்ளார்.

கைதான நபர் 24 வயதுடைய இந்தியப் பிரஜை என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் விமான நிலையப் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

### 10 மாதங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு மூடப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் வரை, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் புறக்கோட்டை, போதிராஜ மாவத்தை, குணசிங்கபுர மற்றும் பஸ்தியன் மாவத்தை ஆகிய இடங்களில் இருந்து இயக்கப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பி.எச்.ஆர்.டி. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

விமானப் படையினரால் இந்தப் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒருங்கிணைந்த கால அட்டவணையின் கீழ் இயங்கும் நீண்ட தூரப் பஸ்கள் பஸ்தியன் மாவத்தை பஸ் டிப்போவில் இருந்தும், ஏனைய குறுகிய தூர பஸ்கள் போதிராஜ மாவத்தையில் இருந்தும் இயக்கப்படும் எனவும் சந்திரசிறி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாறு பஸ் தரிப்பிடம் மறுசீரமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் புனரமைப்புத் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 'சுத்தமான இலங்கை' திட்டத்தின் கீழ் சுமார் 540 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், இது ஒரு வருடத்துக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் இலங்கை போக்குவரத்துச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

### முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் பதிவாகின.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் 2025 ஒகஸ்ட் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலம் 1986ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டத்தை நீக்குவதற்கான சட்டமூலமாகும்.

நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் ஜனாதிபதிக்கு அல்லது முன்னாள் ஜனாதிபதியின் கைம்பெண்ணுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிடம் அல்லது செலுத்தப்பட்ட மாதாந்த படி, நீக்கப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் ஜனாதிபதிக்கு அல்லது முன்னாள் ஜனாதிபதியின் கைம்பெண்ணுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த செயலகப் படித்தொகை, வழங்கப்பட்ட அலுவலக போக்குவரத்து மற்றும் அத்தகைய வேறு வசதிகள், நீக்கப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் ஜனாதிபதியின் கைம்பெண்ணுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த ஓய்வூதியம் என்பன இரத்துச் செய்யப்படும்.

அத்துடன், "ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்)" சட்டமூலத்தில் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன இன்று பிற்பகல் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார். இதற்கு அமைய குறித்த சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமாக நடைமுறைக்கு வரும்.



# ஒரு சைக்கிள், 3 மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விசித்திர விபத்து

## அவற்றில் பயணித்த அனைவரும் சிறு காயங்களுடன் தப்பினர்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை வீதியில் மருதனார்மடம் சந்திப் பகுதியில் இன்று புதன்கிழமை ஒரு சைக்கிளும், 3 மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை வீதியில் மருதனார்மடம் பகுதியில் , வீதியின் மறுபக்கத்துக்குச் சைக்கிளைத் திருப்ப முற்பட்டவருடன் மோட்டார் சைக்கிளில் வந்தவர் மோதி, நிலைதடுமாறி எதிரே வந்த 2 மோட்டார் சைக்கிள்களுடன் மோதியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஒரு சைக்கிளும், 3 மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளன. அவற்றில் பயணித்த அனைவரும் சிறு காயங்களுடன் தப்பியுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளைச் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# ரி - 56 ரக துப்பாக்கியுடன் இருவர் கைது!

கொழும்பு , கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் துப்பாக்கியுடன் இருவர், பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து ரி – 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தேசிய வலைப்பந்தாட்ட போட்டியில் வென்ற அரச உத்தியோகத்தர்களுக்குக் கௌரவிப்பு

அரச உத்தியோகத்தர்களுக்கான தேசிய வலைப்பந்தாட்ட போட்டியில் வெற்றிபெற்ற வீர வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு மேலதிக அரச அதிபர் க. சிவகரன் தலைமையில் நேற்று (09) மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டு உரையாற்றுகையில், அலுவலகப் பணிக்கு மேலாக இவ் போட்டிகளில் பங்குபற்றுவது பாராட்டத்தக்க விடயம். அதிலும் குடும்பச் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் குறிப்பாக பெண் அரச உத்தியோகத்தர்கள் பங்குபற்றியமை சிறப்பான விடயம்.

தேசியப் போட்டிகளில் பங்குபற்றுவது சவாலான விடயம். அந்தவகையில் எமது மாவட்ட வீர, வீராங்கனை பங்குபற்றி வெற்றியீட்டி யாழ். மாவட்டத்தைப் பெருமைப்படுத்தியுள்ளனர். அந்த உத்தியோகத்தர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். – என்றார்.

இந்தப் போட்டிகளுக்கு முன்னின்று உழைத்த வலைப்பந்தாட்ட பயிற்றுனர் செல்வி மனோன்மணி சின்னத்தம்பியையும் அரச அதிபர் பாராட்டினார்.

எமது பலநாள் கனவான சர்வதேச கிரிக்கெட் மைதானம் மண்டைதீவில் அமையவிருப்பதும், உள்ளக விளையாட்டு அரங்கு அமையவிருப்பதும் பாடசாலைகளுக்கான விளையாட்டு அபிவிருத்திக்கும் அரசு முன்னுரிமை கொடுத்து நிதி ஒதுக்கீடு செய்வகிறது. இதன் மூலம் எமது மாவட்டம் விளையாட்டு துறை மேன்மேலும் அபிவிருத்தி அடையும் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகள் மேலதிக அரச அதிபர் (காணி), பிரதம கணக்காளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரால் வழங்கப்பட்டன. போட்டியில் பங்குபற்றியவர்கள் தமது அனுபவப் பகிர்வையும் வழங்கினர்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வேறு வழியில்லை

"ஆயுதப் போராட்டம் முடிவடைந்து பதினாறு ஆண்டுகளான போதும், எந்த உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இந்தச் சூழலில், பாதிக்கப்பட்டவர்கள் சர்வதேச ஈடுபாட்டை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள அறிக்கை ஏமாற்றமளிக்கின்றது." - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தற்போதைய இலங்கை அரசின் நிலைப்பாட்டை அந்த அரசின் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் வெளியிட்ட உடனேயே தன்னுடைய பிரதிபலிப்பை இலங்கைத் தமிழர்களின் பிரபல்யமான அரசியல் கட்டமைப்பான இலங்கை தமிழரசு கட்சி வெளிப்படுத்தி இருக்கின்றது.

புதிய ஜனாதிபதியும் அவரது அரசும் பதவியேற்று ஒரு வருடம் கடக்கும் நிலைமை வந்துவிட்டது. அதாவது அத்தரப்பின் தற்போதைய பதவிக் காலத்தில் ஐந்தில் ஒரு பகுதி கடந்தாகி விட்டது.

ஆனால், யுத்தம் முடிந்து 16 ஆண்டுகளான போதும் உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்குதல், பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல் போன்றவை தொடர்பில் எந்த நகர்வும் முன்னெடுக்கப்படவில்லை. முன்னைய அரசுகளின் காலத்தில் கடந்து சென்ற பதினைந்து வருடங்கள் போன்றுதான் இந்த அரசின் கீழ் ஒரு வருடமும் கடந்துள்ளது.

தேசிய இனப் பிரச்சினை தீர்வு தொடர்பிலும், அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் மற்றும் நீதி வழங்குவது தொடர்பான விவகாரங்களிலும் இந்த அரசு ஆட்சிக்கு வரமுன்னர் கூறிய விடயங்களில் எந்த முன்நகர்வும் இல்லை. மாறாக, முன் நகர இருக்கக்கூடிய வாய்ப்புகளை தகர்த்து பின்னடைவை ஏற்படுத்தும் வேலைகளே நடைபெற்று வருகின்றன.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், செம்மணி மனிதப் புதைகுழியில் மீட்கப்படும் 240 க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான சட்ட நடவடிக்கை மற்றும் அவை தொடர்பான புலனாய்வுச் செயற்பாடுகள், அதிகாரப் பகிர்வு விடயங்கள் போன்றவற்றில் இந்த அரசு நம்பிக்கை தரும் எந்த நகர்வையும் செய்யவில்லை என்பது தமிழர்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது.

முன்னைய அரசுகளையும் நிர்வாகங்களையும் குறை கூறியபடி, தமிழர்களுக்கு நீதி செய்யாமல் காலத்தை இழுத்தடிக்கும் தந்திரோபாயத்தைத் தான் 'அநுரகுமார அண்ட் கோ'வும் செய்கின்றது என்பது தமிழர்களுக்கு வெளிப்படையாக - அத்துபடியாக - புரியத் தொடங்கி விட்டது.

அந்தச்சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட தமிழர்கள் தங்களுக்கு நீதி கிட்டுவதற்காக சர்வதேச ஈடுபாட்டை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று இலங்கை தமிழரசு கட்சி சுட்டிக் காட்டுவது முற்றிலும் சரியானது.

மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்துவது, அரசமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பான ஏற்பாடுகளை முழு அளவில் நடைமுறைப்படுத்துவது ஆகியவை தொடர்பில் தேர்தலுக்கு முன்னர் அளித்த வாக்குறுதிகளை முழுமையாக மீறி, அந்த வாக்குறுதிகளில் இருந்து தப்பி செல்லக்கூடிய தந்திரோபாய அரசியல் மார்க்கங்களையே இந்த அரசும் முன்னெடுப்பது அப்பட்டமாக வெளிப்படையானது.

ஆகவே இதுவரை காலமும் இருந்த பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகளிலிருந்து எந்த விதத்திலும் வேறுபடாத வகையில் தமிழின அடக்குமுறையை இந்த அரசும் கைகொண்டு வருகையில், தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியை நாடவும், நிவாரணம் பெறவும், பொறுப்புகூறலை செயல்படுத்தவும் சர்வதேச ஈடுபாட்டை - பங்களிப்பை - அழைப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழி இல்லை.



# யாழ். மாவட்டக் குளங்களைத் தூர்வாரும் பொறிமுறையை உருவாக்கும் கலந்தாய்வு








யாழ். மாவட்டத்திலுள்ள குளங்களைத் தொடர்ச்சியாகத் தூர்வார்வது தொடர்பான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பிலும், பரீட்சார்த்தமாக தூர்வார்தலை உடனடியாக நடைமுறைப்படுத்தவது தொடர்பாகவும் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் திங்கட்கிழமை (08) நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் செயன்முறையின் ஒரு பகுதியாக குளங்கள் தூர்வாரப்படவேண்டும் என்றும் அதற்கான பொறிமுறை தொடர்பில் ஆராய்வதே கலந்துரையாடலின் நோக்கம் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். அது தொடர்பில் துறைசார் அதிகாரி களிடமிருந்து ஆலோசனைகளை எதிர் பார்ப்பதாக கலந்துரையாடலின் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்.

குளங்களைத் தூர்வார்தல் தொடர்பான பொறிமுறை நீண்ட காலத்தைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இதனால் தன்னார்வலர்கள் இந்த முயற்சியில் பங்கெடுக்க வந்தாலும் அவர்களும் சலிப்படைகின்றனர் என்று கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் அரச நிதியிலல்லாமல் இதைச் செயற்படுத்துவதற்கு பல்வேறு நிதி வழங்கும் தரப்புக்கள் தயாராக இருந்தாலும் அனுமதிக்கான பொறிமுறை சிக்கலுக்கு உரியதாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இன்னும் சில வாரங்களில் மழை காலம் ஆரம்பித்தால் இந்தப் பணிகளைத் தொடர முடியாது. ஏற்கனவே அனுமதி கோரப்பட்ட கந்தரோடைக் குளத்தையாவது தூர் வார்வதற்கான அனுமதிகள் உடனே வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

கந்தரோடை குளத்தைத் தூர்வார்வதற்கான அனுமதி வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்தால் உடனடியாக வழங்கப்படும் என்றும், அகழப்படும் மண்ணை கொண்டு செல்வதற்கான அனுமதி பிரதேச செயலரால் வழங்கப்படும் எனவும் இந்தப் பணியை விரைவாக ஆரம்பித்து குளங்கள் தூர்வார்தல் தொடர்பில் தன்னார்வலர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழேயே அதிகளவு குளங்கள் உள்ள நிலையில் அவற்றின் கீழ் தூர்வார்வதற்கு உடனடியாக அனுமதிகள் வழங்கக் கூடியவற்றுக்கு அனுமதி வழங்குமாறும் ஏனையவற்றை தூர்வாருவதற்கான முன்னுரிமைப் பட்டியலை தயாரித்து உரிய நியாயப்படுத்தலுடன் தலைமையகத்துக்கு அனுப்புமாறும் கலந்துரையாடலின் போது ஆலோசனை வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரின் கீழ், குளங்களைத் தூர்வாருதலுடன் தொடர்புடைய சகல திணைக்களங்களையும் ஒருங்கிணைத்து கலந்துரையாடலை நடத்தி இதற்கான நிரந்தரப் பொறிமுறையை உருவாக்குமாறும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், கமநலசேவைகள் உதவி ஆணையாளர், பிரதி விவசாயப் பணிப்பாளர், நீர்பாசனப் பொறியியலாளர்கள், குளங்களைத் தூர்வாரும் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.




# மழையால் பிரதான வீதி நீரில் மூழ்கியது பொகவந்தலாவவில் போக்குவரத்து பாதிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

நேற்று மாலை பெய்த கடும் மழையின் காரணமாக காசல் ரீ நீர்தேக்கதிற்கு நீர் ஏந்தி செல்லும் பொகவந்தலாவ கெர்க் கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்ட ஆறு பெருக்கெடுத்தது.

இதன் காரணமாக கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதி வெள்ள நீரால் மூழ்கி காணப் படுகின்றது. இதனால் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தொடர்ந்து பெய்யும் நிலையில் தோட்டத்தின் வழியாக ஊட றுத்துச் செல்லும் ஆற்றறை நீண்ட காலமாக அகலப்படுத்தப்படையால் இந்த வீதி மழை காலங்களில் வெள்ள நீர் நிரம்பி காணப்படுகிறது.

இதனால் இந்த வீதியின் ஊடாக தொழிலுக்கு நாளாந்தம் செல்லும் பொது மக்கள் வாகன சாரதிகள் மற்றும் பாட சாலை மாணவர்கள் பல்வேறு அசௌக ரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த ஆறு மழை காலங்களில் வெள்ள அதிகரித்து வீதி பாதிக்கபடுகின் றமையால் அப்பகுதியில் காணப்படுகின்ற கழிவு பொருள்கள் வீதியில் தேங்கி நிற் கின்றமையால் துர்நாற்றம் விசுவதாகவும் நுளம்பு தொல்லை அதிகரித்துள்ளதாக வும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைபெய்யும் காலப் பகுதியில் மல சல கூட கழிவு நீரை அப்பகுதியில் திறந்து விடுவதால் அந்த வீதியின் ஊடாக போக்குவரத்து மேற்கொள்ளும் மாண வர்கள் மற்றும் பொது மக்களுக்குத் தொற்று நோய்கள் ஏற்பட கூடிய வாய்ப் புக்கள் காணப்படுவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர். இந்த ஆற்றை அகலப்படுத்தித் தருமாறு பலமுறை உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்து வந்த போதிலும் எந்த தரப்பினரும் இதனை கண்டு கொள்வதில்லை என்று மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.




# ஊடகவியலாளர் நிமலராஜனின் விசாரணை அறிக்கை விநியோகம்

(கி.வசந்தன்)




படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர் நிமலராஜனின் விசாரணை அறிக்கை வவுனியா ஊடகவியலாளர்களால் இன்று விநியோகிக் கப்பட்டது.

வவுனியா இலுப்பையடி பகுதியில் வைத்து பொதுமக்கள், வர்த்தகர்கள், சாரதிகள் ஆகி யோருக்கு இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவிய லாளர் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை அறிக்கை மற்றும் கொல் லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் தொடர்பான தகவல் களை உள்ளடக்கிய குறித்த அறிக்கை விநியோகிக்கப்பட்டது.

இதில் வவுனியா ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




# உலக தற்கொலை முயற்சி தடுப்பு தினம் இன்று செப்ரெம்பர் 10


என்.ஹரன்

ஒவ்வொரு 40 நொடிகளிலும் உலகின் ஏதோ ஒரு மூலையில் ஒரு மனிதன் தற்கொலைக்கு முயல்கிறான் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு வருடமும் கிட்டதட்ட 80 லட்சம் பேர் தற்கொலையால் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். பலர் மருத்துவமனைகளில் சேர்த்து காப்பாற்றப்படுகின்றனர்.

உலக தற்கொலை முயற்சி தடுப்பு தினமாக (World Suicide Prevention Day) உலகளாவிய ரீதியில் ஆண்டு தோறும் செப்ரெம்பர் 10 ஆம் திகதி அனுசரிக்கப்படுகிறது.

உலகளவில் கிட்டதட்ட 15 முதல் 29 வயதிலான இளைஞர்களில் இறப்பில் இரண்டாவது காரணியாக தற்கொலை விளங்குகின்றது.

இந்தத் தினத்தினை தற்கொலை தடுப்பிற்கான சர்வதேச அமைப்பு ( (IASP), உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியன இணைந்து 2003 ஆம் ஆண்டில் இருந்து பிரகடனப்படுத்தி நினைவு கூர்ந்து வருகிறது.

மேலும், தென் கிழக்கு ஆசியாவில்தான் 39 சதவீத தற்கொலை வழக்குகள் பதி வாகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்கொலை என்பது ஒருவர் தன்னைத்தானே கொலை செய்து கொள்வதாகும். முட்டாள்தனமாக, கோழைத்தனமாக, பரிதாபமாக மனிதன் எடுக்கும் முடிவுகளில் ஒன்றாகவே இது இருக்கின்றது. தற்கொலை என்பது இறப்புக்களுக்கான காரணத்தில் 13 ஆவது இடத்தை வகிக்கிறது.

அதிக தற்கொலைகள் இடம்பெறும் பகுதியாக சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பா பகுதிகள் இனங்காணப்படுகின் றன. அதேவேளை, பதிவு செய்யப்பட்ட தற்கொலைகள் குறைந்த பகுதிகளாக லத்தீன் அமெரிக்காவும் ஆசியாவின் சில சில பகுதிகளும் அறியப்பட்டுள்ளன.

தற்கொலை செய்ய முடிவெடுப்பவர், தன்னை மட்டும் மாய்த்துக் கொள்வதில்லை. தன்னை சார்ந்திருக்கும் குடும்பத்தையும் சேர்த்தே படுகுழியில் தள்ளி விடுகிறார். தற்கொலை என்னும் தவறான முடிவு, பல்வேறு சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது என மன நல நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகளாவிய ரீதியில் 40 விநாடிகளுக்கு ஒரு முறை என்ற ரீதியில் 3 000 நபர்கள் தினமும் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகிறது. பெண்களை விட இரண்டு மடங்கு ஆண்கள்தான் தற்கொலை செய்கிறார்கள். அதிலும் குறிப்பாக 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப் பட்டவர்களே அதிகம் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என்று அறியப்பட்டுள்ளது.

மன அழுத்தம், குற்றவுணர்வு, இயலாமை, வெட்கம், கடுமையான உடல்வலி, நிதிச் சிக்கல்கள் உள்ளிட்ட பல காரணங்கள் ஒருவரைத் தற்கொலைக்குத் தூண் டலாம். பொதுவாக, தற்கொலை கடவுளுக்கு எதிரான செயலாக கருதப்படுகிறது.

எனினும் நமது இலங்கை திருநாட்டில் நுண்கடன் ஊடாக தற்கொலை செய்தவர்களே தற்காலத்தில் அதிகமாக காணப்படுகின்றனர் இவர்களுள் அதிகம் பெண்களே என்பது குறிப்பிடத் தக்கது.

எமது இன்றைய விழிப்புணர்வின் நோக்கம் விலை மதிப்பற்ற உயிர்களை பாதுகாப்பதே ஆகும். எனவே பிறரது உணர்வுகளை மதித்து அவர்களுக்கு உண்மை யான திருப்திகர பின்னூட்டலை வழங்குவோம் பிறரையும் வாழவைப்போம்.

பெரும்பாலும் பெண்களுக்கு திருமண வாழ்வு மற்றும் அதில் ஏற்படும் பிரச்சினைகள்தான் தற்கொலைக் குக் காரணமாக அமைகின்றன.அவர்களைத் தடுப்பதும் அதுதான்.

காதல் தோல்வி மற்றும் திருமண முறிவு, மிகவும் சோர்வான நிலை, தீராத பிரச்னைகள் – நோய்கள் (புற்றுநோய், பக்கவாதம்), பாலியல் பலாத்காரம், தேர் வில் தோல்வி, தாம்பத்திய உறவில் சந்தேகம், குழந்தை இல்லாமை, போதை – மது பழக்கம் அடிமை, திருமணத் துக்கு முந்தைய கர்ப்பம், கற்பழிப்பு, பாலியல் வன் முறைகள், கடன் – சொத்துப் பிரச்சினை, வேலையின்மை அல்லது வேலை இழப்பு, வியாபாரம், தொழிலில் பிரச் சினை போன்றன இதற்குக் காரணமாக அமை கின்றன.

பொதுவாகத் தனிமையில் இருக்கும் போது, இரவு 12 மணிக்கு மேல் காலை 6 மணிக்குள் அல்லது பகல் நேரத்தில் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தான் தற்கொலைகள் நடக்கின்றன.

உலகிலேயே இளம் வயதில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை தென் இந்தியாவில்தான் அதிகம்.

இந்தியாவைப் பொறுத்தவரை ஒரு லட்சம் பேருக்கு 11 பேர் என்ற விகிதத்தில் தற்கொலை செய்து கொள் கின்றனர்.

நாட்டின் மொத்த எண்ணிக்கையில் மூன்றாம் இடத்தில் இருக்கும் சென்னையில் தற்கொலை செய்து கொள்வோர் மற்றும் முயற்சி செய்பவர்களின் எண் ணிக்கை 11 சதவிகிதம் என மனநல மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள். இது காவல் நிலையங்களில் பதிவான வழங்குகளின் அடிப்படையிலான விவரம். பதிவு செய்யப்படாதவை இவற்றை விட 50 சதவிகிதம் அதிகமாக இருக்கும் என்கிறார்கள் விவரம் தெரிந் தவர்கள்.

உரிய மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது மூலம்

தொடர்ச்சி▼

# உலக தற்கொலை...

**தொடர்ச்சி▲**

தற்கொலை எண்ணங்களைத் தவிர்க்க முடியும். மனச்சிதைவு நோயால் ஒருவருக்கு ஏற்படும் தற்கொலை எண்ணத்தை போக்க குடும்பத்தினரின் அன்பும் அரவணைப்பும் முக்கியமாகத் தேவை.

வடக்கில் அபயம் மையம் போன்றவை தற்கொலைக்கு முயன்றவர்களை தடுத்து அவர்கள் மீண்டும் தற்கொலை முயற்சியில் ஈடுபடாதவாறு உளவியல் ஆலோசனைகளை செய்து வருகின்றன.

உலக தற்கொலை முயற்சி தடுப்பு தினத்தை முன்னிட்டு சென்னை அரசு பொது மருத்துவமனையில் மீண்டு(ம்) வாழ்கிறோம் என்ற தலைப்பில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர்பிழைத்தவர்கள் மனம் திறந்து தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சி ஆண்டு தோறும் இந்தத் தினத்தில் நடக்கிறது.

தற்கொலை என்பது ஒருவரின் தனிப்பட்ட பிரச்னை அல்ல. தற்கொலை எண்ணத்தில் இருப்பவர்கள், இரட்டை மனநிலையில் இருக்கிறார்கள். அதாவது, ஒரு புறம் வாழத் துடிக்கிறார்கள். அது முடியாத போது தான் தற்கொலைக்கு வருகிறார்கள். அது ஒரு சமுதாயத்தின் பிரச்சினை என்பதை அனைவரும் புரிந்து செயல்பட்டால் நாட்டில் தற்கொலைகளை தடுக்க முடியும் என்பதே நிதர்சன உண்மை.

பெரும்பாலான தற்கொலைகள் தனக்காக நடக்கும் நிலையில் உலகில் அத்திப்பூத்தால் போல் சில தற்கொலைகள் சமூக நோக்குக்காக நடக்கவும் செய்கிறது.

முத்துக்குமார், செங்கொடி முதல் துனீசியாவின் முகமது புவாஸிஸி (Mohamed Bouazizi) வரை பலரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஈழத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டித் தன்னையே தீக்கு இரையாகினார், முத்துக்குமார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையில் பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவரை தூக்கிலிடக் கூடாது என்பதற்காக தன்னுயிரை மாய்த்துக்கொண்டார், செங்கொடி.

துனிசீயாவைச் சேர்ந்த முகமது புவாஸிஸி என்ற 26 வயது இளைஞனின் தற்கொலை, அந்த நாட்டில் அரசியல் புரட்சிக்கு வித்திட்டது. முகமது வேலைக்காக ராணுவத்தில் சேர முயற்சி எடுத்தார். லஞ்ச ஊழல நிறைந்திருந்த அந்த நாட்டில் அவருக்கு அந்த வேலை கிடைக்கவில்லை. பல வேலைகளுக்கு முயற்சி செய்து முடியாமல் போகவே, தெருக்களில் காய்கறி விற்று பிழைப்பு நடத்தினர். அதற்கும் மாமூல் கேட்டு அதிகாரிகள் அராஜகம் செய்தனர். ஒரு கட்டத்தில் பெண் போலீஸ் ஒருவர் முகமதுவை அடித்துவிட, மனம் வெறுத்த அவர், இது போன்ற பிரச்சினை வேறு யாருக்கும் வரக் கூடாது என்று தனக்குத் தானே நெருப்பு வைத்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் கடந்த 2010, டிசெம்பர் 17 ஆம் திகதி நடந்தது. உயிருக்கு போராடிய முகமது 2011, ஜனவரி 4 ஆம் திகதி மரணம் அடைந்தார். அவரின் மரணம் துனீசியா நாட்டு மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்தியது. போராட்டத்தை தூண்டியது. அதன் விளைவு 23 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அதிபர் பென் அலி பதவி இழந்தார். இந்தப் புரட்சி, இதர அரபு நாடுகளுக்கும் பரவியது.

மக்கள் பிரச்சினைகளில் நல்வழி காட்டும் நம்பத் தகுந்த அரசியல் தலைமைகள், சமூகப் போராளிகளின் முயற்சிகளுடன், பிறர் நலம் பேணும் மனோபாவத்துடன் மக்களும் நியாயத்துக்காக போராட முன்வருவது மட்டுமே சமூக நோக்கத்துக்காக தன்னுயிரை மாய்த்துக் கொள்வதைத் தடுப்பதற்கான வழியாகும்.

இந்த உடல் நமக்குச் சொந்தமில்லை. உயிரை விடுவதால் எல்லா பிரச்சினைகளும் முடிந்து விடாது. உங்களைச் சுற்றி உள்ளவர்களை நேசிக்கத் தொடங்குங்கள்.உங்கள் வாழ்க்கையை நலமுடன் வாழுங்கள்.






# வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா நேற்று!

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் இணைந்து கொண்டாடிய 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா நேற்று (09) பருத்தித்துறை சூரியமஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் நடராசா திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் , மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி. சுகுணலினி விஜயரத்தினம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மூத்த கலைஞர்களான வெ. முத்துச்சாமி மு. ஜெகநாதனும் கலந்து கொண்டனர்.

கலாபூஷணம் இளையமுத்து துரைமுத்து அரங்கில் இடம்பெற்ற இந்த ஆண்டுக்கான பண்பாட்டு விழாவானது பல்வேறுபட்ட கலை இலக்கிய விழுமியங்களையும் உள்ளடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலக முன்றலில் இருந்து பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமான இந் நிகழ்வில் உடுக்கு இசை (வடமராட்சி வடக்கு வாழ் கஞைர்கள்), வரவேற்பு நடனம் (தொண்டைமானாறு அபிநயசுரபி நடன மன்றம்), கீர்த்தனை (ஞான சம்பந்தர் மன்றம்), காளிங்க நர்த்தனம் (பரத சிவாலய கலைமன்றம்), வில்லிசை (வள்ளி திருமணம் – வேணுகான சபா மன்றம்), நாடகம் (நட்பின் பரிசு வெ. முத்துச்சாமி குழுவினர்), பாரதியின் நடனம் (பரதசுரபி கலாமன்றம்) என்பன இடம்பெற்றன.

கலைஞர்களுக்கான “ கலைப்பரிதி”, “இளங் கலைஞர்”, “இளங் கலைப்பரிதி” விருதுகள் அரச அதிபரால் வழங்கப்பட்டன. தேசிய கலை இலக்கியப் போட்டிகளின் பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.











# வேலணை பிரதேச செயலகத்தால் புங்கை மரநடுகை செயற்றிட்டம்

வேலணை பிரதேச செயலக அலுவலர்கள் பிரிவு கிராம மக்களின் பங்களிப்புடன் நேற்று (09) வேலணை ஜே-13 கிராம அலுவலர் பிரிவில் உள்ள கண்ணாவோடை குளப் பகுதியை அண்டி புங்கை மரநடுகை செயற்றிட்டத்தை மேற்கொண்டனர்.











# வீதிகளில் உலரவிடப்படும் வலைகளால் மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு!

## அப்புறப்படுத்தி கையகப்படுத்தும் மன்னார் நகர சபை

(மன்னார் நிருபர் )

மன்னார் நகர சபை எல்லைக்குள் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதிகளிலும் பொது இடங்களிலும் உலர வைக்கப்பட்ட மீன்பிடி வலைகளை இன்று புதன்கிழமை (10) மன்னார் நகரசபை ஊழியர்கள் அப்புறப்படுத்தி கையகப்படுத்தியுள்ளனர்.

நீண்ட காலங்களாக மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சில மீனவர்கள் ஆபத்தான முறையில் பிரதான வீதிகளிலும் உள்ளக வீதிகளிலும் வலைகளை உலர விடுவதால் துர்நாற்றம் வீசி வருகின்றன. உட்பட விபத்துக்கள் ஏற்பட்டு வந்த நிலையில் இன்று (10) நகரசபை ஊழியர்களால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய முதல் கட்டமாக இன்று புதன்கிழமை (10) ஜிம்றோன் நகர் மற்றும் எமில் நகர் பகுதிகளில் உள்ள வீதிகளில் உலர விடப்பட்டிருந்த வலைகள் நகர சபையால் அப்புறப்படுத்தப்பட்டுக் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் மன்னார் நகர சபை எல்லைக்குள் உள்ள பிற பகுதிகளில் தொடர்ச்சியாக போக்குவரத்துக்கும் மக்களின் நடமாட்டத்துக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் வலைகள் உலரவிடும் மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பு ஆலயத்தில் மாம்பழம் இரண்டரை லட்சம் ரூபாவுக்கு ஏலம்!

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பில் ஆலயம் ஒன்றில் நேற்று இரவு மாம்பழம் ஒன்று இரண்டரை லட்சம் ரூபாவுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக மதிப்பில் ஏலம்போன மாம்பழமாக இது காணப்படுகின்றது.

மட்டக்களப்பு தேற்றாத்தீவு பால் மணல்மேடு அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெற்று வரும் நிலையில் நேற்று மாலை மாம் பழத்திருவிழா நடைபெற்றது.

ஆலயத்தில் விசேட வழிபாடுகளை தொடர்ந்து வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி வெளிவீதியுலா நடைபெற்றது. அங்கு மாம்பழத் திருவிழா நடைபெற்றது.



இதன்போது மாம்பழத் திருவிழாவுக்கு பயன்படுத்தப்பட்ட மாம்பழம் ஆலயத்தில் ஏலத்துக்கு விடப்பட்டபோது சுமார் இரண்டரை லட்சம் ரூபா ஏலத்தொகையைக் கொண்டு இளையதம்பி தவாகரன் என்ற அடியவர் மாம்பழத்தை வாங்கிக் கொண்டார்.



# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் “தொழில்முனைவோர் தினம் - 2025”

(நூருல் ஹுதா உமர் )

தென்கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்தின் முகாமைத்துவத் துறையின் முன்னெடுப்பில், தொழில்முனைவோர் தினம் கொண்டாடப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் ஏ.ஆர். மன்சூர் ஞாபகார்த்த பிரதான அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வின் கருப்பொருள் “புதுமையால் உயர்வடைவோம் – அடுத்த தலைமுறை தொழில்முனைவோரை வலுப்படுத்துவோம்” என்பதாகும்.

நிகழ்வில் வணிகக் கண்காட்சி, தொழில்முனைவோர் கலந்துரையாடல் மற்றும் குழு விவாதங்கள், இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான வணிகத் திட்டப் போட்டி, பாடசாலைகளுக்கிடையிலான வினாடி வினா மற்றும் பட்டதாரி முன்னோடி மற்றும் பிராந்தியச் சிறப்புரிமை பாராட்டு விழா ஆகியவை இடம்பெற்றன.

நிகழ்வின் வரவேற்புரையை முகாமைத்துவத் துறைத் தலைவர் மற்றும் ‘Entrepreneurship Day - 2025’ ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.சி. சல்பியா உம்மா வழங்கினார்.



பின்னர், சிறப்புரையை முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா வழங்கினார். முதன்மை உரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். ஜுனைடீன் ஆற்றினார்.

இதில் பேராசிரியர் கலாநிதி சல்பியா உம்மா (ஒருங்கிணைப்பாளர்), கலாநிதி ஐ. ரைசல் (இணை ஒருங்கிணைப்பாளர்), மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளரும் நிகழ்ச்சியின் தொகுப்பாளரும் வினாடி விடை போட்டியின் மாஸ்ட்டருமான எம். எம். ஷிராஜ், வினாடி விடை போட்டி இணை ஒருங்கிணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான எம். சிராஜி, வினாடி விடை போட்டி இணை ஒருங்கிணைப்பாளரும் விரிவுரையாளருமான எம்.வி. பாத்திமா சஞ்சீதா, பல்கலைக்கழக வணிக திட்ட முன்மொழிவு போட்டி ஒருங்கிணைப்பாளரும் விரிவுரையாளருமான எம். ஃபார்விஸ், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல். ஷரீப்டீன், நிகழ்வின் செயலாளரும் விரிவுரையாளருமான ஏ.ஆர். பாத்திமா தபாணி ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர். அத்துடன் உதவி விரிவுரையாளர்களான ஹம்தானி மற்றும் நுப்லா ஆகியோரும் இணைந்திருந்தனர்.

நிகழ்வில் தொழில் நிபுணர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு விஷேட வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் பேராசிரியர் பி. நிஷாந்தா (கொழும்பு பல் கலைக்கழக Entrepreneurship துறை), ரவி நிஷாங்கர் (தலைவர், தொழில்துறை மேம்பாட்டு நிலையம் (IDB), ரகுலன் தர்மகுலசிங்கம் (Founder, Palladian Global, Sri Lanka), பேராசிரியர் எம். அப்துல் ஜமால் ( Puducherry பல்கலைக்கழகம், பொருளாதாரத் துறை), யாஸ்மின் சுல்தானா (Associate Professor, Puducherry பல்கலைக்கழகம், இந்திய ஹைதராபாத்தின் முன்னாள் பேராசிரியரும் துறைத் தலைவரும்) ஆகியோர் வரவேற்கப்பட்டனர்.





# இமாச்சல், பஞ்சாபில் மழை வெள்ளம்: பாதிப்புகளைப் பார்வையிட்டார் மோடி





இமாச்சலப் பிரதேசம் மற்றும் பஞ்சாபில் வெள்ள பாதிப்பு பகுதிகளை பிரதமர் மோடி நேற்று பார்வையிட்டு, மீட்பு பணி மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களில் கன மழை காரணமாக வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டது. பஞ்சாப் மாநிலத்தில் பெய்த கன மழை காரணமாக மாநிலத்தின் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது.

டில்லியில் நேற்று காலை குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் ஓட்வாக்களித்த பிரதமர் மோடி, வெள்ள பாதிப்பு பகுதிகளை பார்வையிட நேற்று மாலை இமாச்சல் பிரதேசம் புறப்பட்டார்.

நேற்று மதியம் 1.30 மணியளவில் காங்கரா பகுதிக்கும் சென்ற பிரதமர் மோடி மண்டி, குல்லு ஆகிய மாவட்டங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு பாதிப்பு பகுதிகளை ஹெலிக்கொப்டரில் சென்று பார்வையிட்டார். அதன்பின் மாநில உயர் அதிகாரிகளை சந்தித்து ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

இதில் மாநில ஆளுநர் சிவ் பிரதாப் சுக்லா, முதல்வர் சுக்விந்தர் சிங் சுகு, மத்திய அமைச்சர் ஜே.பி.நட்டா உட்பட பலர் கலந்து கொண்டனர். அவருக்கு வெள்ளம் மற்றும் நிலச்சரிவு பாதிப்பு குறித்து அதிகாரிகள் விளக்கினர். இங்கு மொத்தம் 370 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 205 பேர் மழை, வெள்ளம், மற்றும் நிலச்சரிவு பாதிப்பால் உயிரிழந்தனர். 165 பேர் வீதி விபத்தில் உயிரிழந்தனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களையும் பிரதமர் மோடி சந்தித்து பேசினார். வெள்ளத்தில் சிக்கி குடும்பத்தினரை இழந்த 11 மாத குழந்தை நீத்திகாவையும் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார். இந்த குழந்தை தற்போது உறவினர்களின் பாதுகாப்பில் உள்ளது. மீட்பு பணியில் ஈடுபட்ட தேசிய பேரிடர் மீட்பு குழுவினர், மாநில குழுவினரிடம் பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இமாச்சலப் பிரதேசத்துக்கு 1,500 கோடி இந்திய ரூபா நிவாரண நிதி அளிக்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்தார்.

இங்கு வீடுகளை இழந்த மக்களுக்கு, பிரதமரின் ஆவாஸ் யோஜனா மூலம் வீடு கட்டி தரப்படவுள்ளது. சேதம் அடைந்த நெடுஞ்சாலைகள், பள்ளிகள் ஆகியவற்றை மீண்டும் உருவாக்க பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து நிதி அளிக்கப்படவுள்ளது. நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு தேவையான உதவிகளும் அளிக்கப்படவுள்ளன. சேதம் அடைந்த நீர்நிலைகளும் சீர்படுத்தப்படுகின்றன.

இமாச்சலப் பிரதேசத்தில் ஆய்வை முடித்துக் கொண்டு, பிரதமர் மோடி பஞ்சாப் புறப்பட்டார். குர்தாஸ்பூரில் நேற்று மாலை 4.15 மணிக்கு நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்திலும் பிரதமர் மோடி பங்கேற்றார். அங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களையும் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார். அம்மாநிலத்துக்கு1600 கோடி இந்திய ரூபா நிதியுதவி அறிவித்தார். பஞ்சாபில் வெள்ளத்தில் சிக்கி இதுவரை 51 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளத்தில் உயிரிழந்தவர் களுக்கு நிவாரண நிதியாக 2 லட்சம் இந்திய ரூபாவும், காயம் அடைந்தோருக்கு 50 ஆயிரம் இந்திய ரூபாவும் வழங்கப்படும்.

# அரசு சார்பில் இளையராஜாவுக்குப் பாராட்டு விழா: செப்ரம்பர் 13இல் மு.க. ஸ்டாலின் நடத்துகிறார்

இசையமைப்பாளர் இளையராஜாவின் இசைப்பயணத்தின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் செப்ரம்பர் 13 ஆம் திகதி சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் பாராட்டு விழா நடைபெறுகிறது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

இசைஞானி இளையராஜா தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி போன்ற பல்வேறு மொழிகளில் 1,500 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில், 8,500 இற்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்துள்ளார்.

கடந்த1975ஆம்ஆண்டுதொடங்கிய இளையராஜாவின் இசைப்பயணம் இந்த ஆண்டுடன் 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. திரையிசை மட்டுமின்றி பல்வேறு தனியிசை படைப்புகளையும் வெளியிட்டுள்ளார் இளையராஜா. முழு மேற்கத்திய பாரம்பரிய சிம்பொனி இசை சிகரத்தையும் தொட்டு சாதனை படைத்துள்ளார்.

இந்த சாதனையை படைத்த முதல்



தமிழர் மட்டுமல்ல இளையராஜா முதல் இந்தியரும் ஆவார். ஆசிய நாடுகளைச் சேர்ந்த எவரும் இச்சாதனையை இதுவரை நிகழ்த்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த மார்ச் 8 ஆம் திகதி லண்டனில் முதல் நேரடி சிம்பொனி இசைநிகழ்ச்சி நடத்தவிருந்த நிலையில், மார்ச் 2ஆம் திகதி முதல்வர் ஸ்டாலின், இளையராஜா வீட்டுக்கு சென்று பாராட்டினார்.

தொடர்ந்து லண்டன் சென்று சிம்பொனி சாதனை நிகழ்த்தி சென்னை திரும்பிய நிலையில், முதல்வரை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதன்பின், முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், 'இளையராஜாவின் அரை நூற்றாண்டு காலத் திரையிசைப் பயணத்தை அரசின் சார்பில் கொண்டாட முடிவெடுத்துள்ளோம்' என அறிவித்திருந்தார்.

அதன்படி, எதிர்வரும் செப்ரம்பர் 13ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் திரையுலகில் பொன்விழா காணும் இசைஞானி இளையராஜாவுக்கு தமிழக அரசின் சார்பில் மிகப்பெரிய அளவில் பாராட்டு விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இன்னிசை நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து இளையராஜாவின் சிம்பொனி இசைநிகழ்ச்சியும் நடைபெறும். விழாவில், துணை முதல்வர் உதயநிதி வரவேற்புரையாற்றுகிறார். முதல்வர் ஸ்டாலின் தலைமையுரையாற்றுகிறார். நடிகர்கள் கமல்ஹாசன், ரஜினிகாந்த் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




# கட்டார் மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 5 ஹமாஸ் உறுப்பினர்கள் உயிரிழப்பு

கட்டாரின் தலைநகரின் மீது இஸ்ரேலிய விமானங்கள் நடத்திய தாக்குதலில் தங்கள் உறுப்பினர்கள் 5 பேர் கொல்லப்பட்டனர் என பாலஸ்தீனிய ஹமாஸ் தெரிவித்துள்ளது.

ஆனால், தமது பேச்சுவார்த்தையாளர்கள் குழுவைக் கொல்லும் முயற்சி தோல்வியடைந்துள்ளதாக ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, காசா பகுதியில் போர் நிறுத்தத்திற்கான அமெரிக்காவின் அண்மைய முன்மொழிவு குறித்து விவாதிக்க ஹமாஸின் பேச்சுவார்த்தை குழு தோஹாவில் உள்ள ஒரு குடியிருப்பு வளாகத்தில் கூடியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இஸ்ரேலிய விமானங்கள் அந்த வளாகத்தின் மீது தாக்குதலை நடத்தியுள்ளன. இதனைக் கட்டார் அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது கோழைத்தனமான, சர்வதேச சட்டத்தின் அப்பட்டமான மீறல் என்றும் அது கூறியுள்ளது.

அத்துடன், தாக்குதலில் ஹமாஸின் உயிரிழப்பு விபரங்களை அறிவிக்காமல், தமது நாட்டின் உள்நாட்டு பாதுகாப்புப் பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளது.

எனினும் 2023 ஒக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீதான தாக்குதலை ஏற்பாடு செய்த மூத்த ஹமாஸ் தலைவர்களைக் குறிவைத்து, இந்த தாக்குதல் நடத்தப்பட்டதால், இந்த தாக்குதல் முழுமையாக நியாயமானது என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் துரதிஸ்டவசமானது என்று குறிப்பிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், எனினும் ஹமாஸை ஒழிப்பது ஒரு தகுதியான இலக்கு என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடான கட்டார், அமெரிக்காவின் விமானத் தளத்தையும் கொண்டுள்ளது.

இந்தநிலையில் 2012 முதல் ஹமாஸின் அரசியல் பணியகத்துக்கும் இடமளித்துள்ளது

அத்துடன், அமெரிக்கா மற்றும் எகிப்துடன் இணைந்து, ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மறைமுக பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தராகவும் செயல்பட்டு வருகிறது.

இதேவேளை, இந்த தாக்குதல் நடவடிக்கையில் 15 இஸ்ரேலிய போர் விமானங்கள் ஈடுபட்டன என தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக, தமது தாக்குதலில் ஹமாஸ் உறுப்பினர்களில் தலைமை பேச்சுவார்த்தையாளரும் நாடு கடத்தப்பட்ட காசா தலைவருமான கலீல் அல்-ஹய்யா மற்றும் நாடு கடத்தப்பட்ட மேற்குக் கரைத் தலைவர் ஜாஹர் ஜபரின் ஆகியோர் அடங்குவர் என்று இஸ்ரேலிய அதிகாரி தெரிவித்திருந்தார்.

எனினும், தமது தலைமை பேச்சுவார்த்தையாளர் கலீல் அல் ஹய்யா இந்த தாக்குதலில் கொல்லப்படவில்லை என்று ஹமாஸ் அறிவித்துள்ளது.







# ரஷ்யாவின் விமானங்களை சுட்டு வீழ்த்தியது போலந்து

உக்ரைன் மீதான தாக்குதலின் போது தனது வான்வெளியை மீறிய ரஷ்யாவின் ஆளில்லா விமானங்களை, சுட்டு வீழ்த்தியதாக போலந்து தெரிவித்துள்ளது.

உக்ரைன் போரின் தொடக்கத்திற்கு பின்னர், நேட்டோ நாடு தனது வான் வெளியில் ரஷ்ய சொத்துக்களை நேரடியாக சேதப்படுத்துவது இதுவே முதல் முறையாகும்.

இதனடிப்படையில் போலந்தின் 4 விமான நிலையங்கள் மூடப்பட்டன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# இந்தியா, சீனாவுக்கு 100 வீத வரி விதிக்குமாறு ஐரோப்பிய நாடுகளுக்கு ட்ரம்ப் வலியுறுத்தல்



இந்தியா மற்றும் சீனாவுக்கு 100 சதவீத வரி விதிக்க ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைனுடன் போரில் ஈடுபட்டு வரும் ரஷ்யாவிடம் எண்ணெய் பொருள்களை வாங்கும் முன்னணி நாடுகளாக இந்தியா மற்றும் சீனா இருந்து வருகிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்தியாவுக்கு 50 சதவீத வரியை அமெரிக்கா விதித்தது.

இதனால், இந்தியா, அமெரிக்கா நாடுகளுக்கு இடையேயான பரஸ்பர உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி ரஷ்யாவிடம் தொடர்ந்து எண்ணெய் பொருட்களைக் கொள்முதல் செய்து வரும் இந்தியாவிடம், சீனா மற்றும் ரஷ்யா நெருக்கம் காட்டத் தொடங்கின.

இந்த நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக, இந்தியா மற்றும் சீனாவுக்கு 100 சதவீத வரியை விதிக்குமாறு, ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கோரிக்கை விடுத்துள்ளார் என ஐரோப்பிய ஒன்றிய தூதர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொண்டால், தாங்களும் இதேபோன்ற சுங்கவரிகளை விதிக்க தயாராக இருப்பதாக அமெரிக்கா சுட்டிக்காட்டியதாக, ஐரோப்பிய ஒன்றிய தூதர் தெரிவித்தார்.

பொருளாதாரத் தடைகள் குறித்து விவாதிக்க தற்போது ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழு வொஷிங்டனில் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

புதன்கிழமை 10/09/2025

## மின்சார வாகன விற்பனை வீழ்ச்சி



C2▶



# ஒன்டாரியோ மாகாணத்தின் பெரி நகரத்தில் அவசர நிலை

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள பெரி நகரில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரி நகரின் மேயர் அலெக்ஸ் நட்டால் இந்த அவசரநிலையை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

நகரில் சட்டவிரோதமான முறையில் வீடற்றவர்களினால் அமைக்கப்படும் முகாம்களை அகற்றும் நோக்கில் இந்த அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. C2▶

# கனடாவில் பக்லவா என்ற பேஸ்ட்ரி வகை இனிப்புப் பண்டம் தொடர்பில் எச்சரிக்கை



கனடாவில் பக்லவா என்ற பேஸ்ட்ரி இனிப்பு பண்ட வகை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவில் பரவியுள்ள சால்மொனெல்லா தொற்று தொடர்பான தேசிய விசாரணையின் ஒரு பகுதியாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்டாரியோ மாகாணம் லண்டன் நகரில் விற்கப்பட்ட இந்த வகை சில இனிப்புகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

ஜுனைத் ஸ்வீட்ஸ் (Jnaid Sweets) நிறுவனம் தயாரித்த “கிளாசிக் பக்லவா,” “துருக்கி வகை பக்லவா,” “பிஸ்தா / பிங்கர்ஸ்,” மற்றும் “கிரவுன்ஸ் கிங்” ஆகிய இனிப்புகள் இவ்வாறு திரும்பப் பெறப்பட்டுள்ளன.

கனேடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் இந்த நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இனிப்புகள் மே 15 முதல் ஜுலை 30 வரை லண்டன் நகரின் தெற்கு பகுதியில் உள்ள ஜுனைத் ஸ்வீட்ஸ் என்ற இனிப்புப் பண்ட விற்பனை நிலையத்தில் விற்கப்பட்டன என தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றின் முக்கிய பொருளான பிஸ்தா தற்போது சால்மொனெல்லா பரவலுக்குக் காரணமாகியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

மீளப்பெறல் அறிவிப்பு விடுக்கப்பட்ட பிஸ்தா மற்றும் பிஸ்தா சேர்க்கப்பட்ட பொருள்களை உண்ணவும், விற்கவும், வழங்கவும் கூடாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சால்மொனெல்லா தொற்று குறித்த 62 சம்பவங்கள் பிரிட்டிஷ் கொலம்பியா, மானிடோபா, ஒன்டாரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் பதிவாகியுள்ளன.

# மின்சார வாகன விற்பனை வீழ்ச்சி



கனடாவில் மின்சார வாகன விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.

2025ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் புதிய வாகனப் பதிவு மொத்தத்தில் 5.9 வீதம் அதிகரித்திருந்தாலும், முழுமையான மின்சார வாகனப் பதிவுகள் 39.2 வீதம் வீழ்ச்சியடைந்தன.

அதே நேரத்தில் பிளக்-இன் ஹைபிரிட் வாகனப் பதிவுகளும் 2.2 வீதத்தினால் குறைந்துள்ளன.

ஆனால் பெட்ரோல் மூலம் தானாகவே சார்ஜ் செய்யக்கூடிய ஹைபிரிட் வாகனப் பதிவுகள் 2024ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 60.7 வீதம் அதிகரித்துள்ளன.

அனைத்து சவால்களையும் மீறி, 2025 இரண்டாம் காலாண்டில் 5,41,566 புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது கொவிட்-19 பெருந்தொற்றுக்கு பின்னரான காலத்தில் அதிகபட்ச பதிவு எண்ணிக்கையாகும். வாகன வகைகளில், வேன்களின் பதிவுகள் 29 வீதம் அதிகரித்துள்ளன.

இதே காலத்தில், 'பூஜ்ய உமிழ்வினைக் கொண்ட வாகனங்கள்' 29.5 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளன. மின்சார வாகன விற்பனை குறைவதற்கான முக்கிய காரணமாக மானியக் குறைப்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

# ஓடும் வாகனங்கள் மீது கற்களை வீசியவர் கைது



கனடாவின் நயாகரா பிராந்தியத்தில் கடந்த கோடைக்காலத்தில் நெடுஞ்சாலை மேம்பாலங்களில் இருந்து வாகனங்கள் மீது கற்களை வீசி எறிந்த சம்பவங்கள் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் ஒன்டாரியோ மாகாண பொலிஸார் மேற்படி நபரை கைது செய்துள்ளனர்.

ஜுன் முதல் ஒகஸ்ட் வரை பல நெடுஞ்சாலைகளில் சென்ற வாகனங்களுக்கு மேம்பாலங்களில் இருந்து கற்கள் எறியப்பட்டதாக பொலிஸ/க்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சென் கெதரீன்ஸ் நகரத்தைச் சேர்ந்த அம்மார் அல்-சுபைதி (வயது 48), என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மரண ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் ஒன்பது முறை வாகனங்களை சேதப்படுத்தினார் என அவர்மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

---

**ஒன்டாரியோ...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் நெருக்கடி காரணமாக பரவிவரும் முகாம்கள் அகற்றப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

பெரி நகர குடிமக்கள் பொறுத்தது போதும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் உதவி தேடும் மக்களை ஆதரிக்கத் தயாராக உள்ளோம். ஆனால் பொது இடங்களில் முகாம்களை அனுமதிக்க முடியாது.

நகரத்தின் தெருக்கள், பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் முகாம்களை அகற்றுவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முகாம்களினால் நகரில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் எழுந்துள்ளதாகவும் மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# பொம்மைக் கார் ஓட்டிய கனேடியர் ஒருவர் கைது

கனடாவில், வீதியில் சிறுபிள்ளைகளுக்கான பொம்மைக் கார் ஒன்றை ஓட்டிச் சென்ற நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திலுள்ள பிரின்ஸ் ஜார்ஜ் நகரில், கேஸ்பர் லிங்கன் என்பவர், சிறுபிள்ளைகளுக்கான Barbie Jeep வகை பொம்மைக் கார் ஒன்றை ஓட்டி வருவதை ஆர்வமுடன் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் பொதுமக்கள் சிலர்.

சிறிது நேரத்தில் பொலிஸ் கார் ஒன்று வந்து நிற்க, அதிலிருந்து இறங்கிய பொலிஸார் லிங்கனைக் கைது செய்ய, அவரை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அவர் எதற்காக கைது செய்யப்படுகிறார் என்பது புரியாமல் திகைப்படைந்துள்ளார்கள். .

பொம்மைக் கார் ஓட்டுவது தவறா என அதே வீதியில் பயணித்துக்கொண்டிருந்த சிலர் கேள்வி எழுப்ப, லிங்கன் கைது செய்யப்படும் காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவ, இணையமும் திகைப்படைந்துள்ளது.

ஆனால், எந்த வாகனத்தை வீதியில் ஓட்டினாலும், அது பொம்மைக் காராகவே இருந்தாலும், அதற்கு உரிமம் வேண்டும், காப்பீடு இல்லாத வாகனங்களை வீதியில் இயக்குவது குற்றம் என்கிறார்கள் அதிகாரிகள்.

அத்துடன், தான் மது அருந்தியிருந்ததும் தான் கைது செய்யப்பட காரணம் என்று கூறும் லிங்கன், தயவு செய்து மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டாதீர்கள் என தெரிவித்துள்ளார்.







